அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 04/2015

எனது இல : EST -9/DICIP/06/0052
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07
2015.01.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

**<u>பொதுசன ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குதல்</u>**

பொதுசன ஊடகங்களுக்கு அல்லது பொதுமக்களுக்கு உத்தியோகபூர்வ செய்திகளை வழங்குவது தொடர்பாக தாபனக் கோவையின் II ஆம் தொகுதி XLVII அத்தியாயத்தின் 6 மற்றும் 7 ஆம் பிரிவுகள் தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. பல்வேறு விடயங்கள் தொடர்பாக அரசாங்க அலுவலர்களினால், கடந்த காலங்களில், பொதுசன ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட சில தகவல்கள் காரணமாக பல இடையூறுகள் ஏற்பட்டமை பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக துரித கதியில் அவதானஞ் செலுத்தப்பட்டு, அவ்வாறான நிலைமைகள் இனிமேல் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

03. பொதுசன ஊடகங்களுக்கு அல்லது பொது மக்களுக்கு உத்தியோகபூர்வ செய்திகளை வழங்குவது தொடர்பாக தாபனக் கோவையின் II ஆம் தொகுதி XLVII அத்தியாயத்தின் 6 மற்றும் 7 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய சகல அரசாங்க அலுவலர்களும் சேவையாற்ற வேண்டியுள்ளதுடன், அதற்கு புறம்பாக செயற்பட்டு, ஏதேனும் இடையூறுகள் ஏற்படும் பட்சத்தில் அது சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பது பற்றி உரிய அலுவலர்களுக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றேன்.

ஒப்பம்/. ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு